No. of Printed Pages : 7

334333

**6151**

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் - முதல் தாள்

# Language – Part I – TAMIL – Paper I

**(செய்யுள், உரைநடை)**

நேரம் : 2½ மணி ]  [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் 49-க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

**I.** உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக . **6x1=6**

**1.** திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல் __________

(அ) நால்வர் நான்மணிமாலை

(ஆ) திருவள்ளுவமாலை

(இ) இரட்டை மணிமாலை

**2.** சரசுவதி அந்தாதி __________ இயற்றிய நூல்களுள் ஒன்று.

(அ) கவிமணி  (ஆ) பாரதிதாசன்  (இ) பாரதியார்

[ திருப்புக

3. கலம்பகம் __________ வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
(அ) தொண்ணூற்றாறு (ஆ) பதினெட்டு (இ) பத்து

4. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று __________ இல்லாமை.
(அ) வாக்குரிமை (ஆ) பேச்சுரிமை (இ) சொத்துரிமை

5. 'பண்ணொடு தமிழொப்பாய்' எனத் தொடங்கும் பாடல் இடம் பெறும் நூல் __________.
(அ) திருவாசகம் (ஆ) திருக்குறள் (இ) தேவாரம்

6. காந்தியடிகள் எக்குறளைப் படித்ததன் மூலம் திருக்குறள் மீதும் தமிழ் மீதும் பற்றுக் கொண்டார் ?
(அ) அன்புடையார் எல்லாம் ... (ஆ) இன்னா செய்தார்க்கும் ...
(இ) காலத்தினாற் செய்த ... (ஈ) தீயினாற் சுட்ட புண் ...

பகுதி - 2

II. கோடிட்ட இடத்தை நிரப்புக. 6x1=6

7. 'அரி' என்னும் சொல்லின் பொருள் __________.

8. இளங்கோவடிகள் __________ நாட்டைச் சேர்ந்தவர்.

9. சீறாப்புராணத்தை இயற்றியவர் __________.

10. தமிழ் மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் __________.

11. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது __________.

12. இராமலிங்கர் சத்திய தருமச் சாலையை நிறுவிய இடம் __________.

## பகுதி - 3

**III.** பொருத்துக. **4x1=4**

| | | | |
|---|---|---|---|
| **13.** | உதிரம் | - | வரப்பு |
| **14.** | வரம்பு | - | ஓய்வெடுத்தல் |
| **15.** | கேண்மை | - | குருதி |
| **16.** | இளைப்பாறுதல் | - | நட்பு |

## பகுதி - 4

**IV. விடைக்கேற்ற வினா அமைக்கவும். 4x1=4**

**17.** இலக்கியக் கூறுகள் மருந்தின் மேலிட்ட இனிப்புப் போன்றவை.

**18.** கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் 'வால்ட் டிஸ்னி' என்பவர் ஆவார்.

**19.** சுவையின் அடிப்படையில் உவர்நிலம் என நிலத்தைத் தமிழர் வகைப்படுத்தினர்.

**20.** பெண்கள் எல்லாத் துறைகளிலும் பணிபுரிகின்றனர்.

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

## பகுதி - 1

**V.** கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்க. **5x2=10**

**21.** ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது ?

**22.** குகனின் வேண்டுகோள் யாது ?

**23.** 'இப்போது இங்கு அவன் உதவான்' - யார் யாரிடம் கூறியது ?

[ திருப்புக

24. வயல் தரும் விளைவுகள் யாவை ?

25. பண்பு எனப்படுவது யாது ?

26. வேந்தர்க்குரிய பொருள்கள் யாவை ?

27. சிவபெருமான் எத்தன்மையன் - என நாவுக்கரசர் கூறுகிறார் ?

## பகுதி - 2

VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்க. **5x2=10**

28. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது ?

29. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை ?

30. சித்த மருத்துவம் என்பது யாது ?

31. காந்தியடிகளுக்கு இளம் பருவத்திலேயே இயல்பாய் அமைந்த உயர் பண்புகள் யாவை ?

32. திரைப்படச்சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை ?

33. வள்ளலாரின் முழக்கம் யாது ?

34. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில் நுட்பத் துறைகள் யாவை ?

## பிரிவு – III

(மதிப்பெண்கள் : 24)

### பகுதி - 1

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றினுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **3x4=12**

35. 'நிற்க நேரமில்லை' என்ற பாடல் சுட்டும் சாதனைப் பூக்கள் எவை ?

36. சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியதென்ன ?

37. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை ?

38. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?

39. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

### பகுதி - 2

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றினுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்க. **3x4=12**

40. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை ?

41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது ?

42. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.

43. தொன்மைத் தமிழகத்தின் உழவுத் தொழில் குறித்து எழுதுக.

44. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

**IX.** கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. **5x1=5**

**45.** நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும்
இவையிவை யுடைநந்தி
மதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர்
வானகம் ஆள்வாரே.

(i) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது ?
(ii) இப்பாடலில் யாருடைய வீரம் குறிப்பிடப்படுகிறது ?
(iii) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகையை எழுதுக.
(iv) இலக்கணக் குறிப்புத் தருக; - இவையிவை
(v) பொருள் தருக : - கவிகை

**46.** கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. **5x1=5**

'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பார் திருமூலர். உடலை ஓம்ப வேண்டியதன் இன்றியமையாமையைத் தமிழர் அறிந்திருந்தனர்.

திருவள்ளுவர் 'மருந்து' என்னும் ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார். உடல் உறுதியாய் இருப்பதற்கு வாதம், பித்தம், சீதம் இம்மூன்றின் சமநிலையே காரணமாகும். அவற்றின் சமநிலை தவறும்போது நோய்மிகும்.

அவற்றைச் சமப்படுத்த இயற்கை தரும் காய்கனிகளில் இருந்தே மருந்து கண்டு உண்டனர். 'மருந்தாகி தப்பா மரத்தற்றால்' என்னும் திருக்குறள் வரி, தமிழ் மருத்துவத்தின் தொன்மையை எடுத்தியம்பும், பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்த மருத்துவமாயிற்று.

**வினாக்கள்.**

(i) உடல் உறுதியாய் இருப்பதற்கு எவை காரணமாகும் ?
(ii) தமிழ் மருத்துவத்தின் தொன்மையை எடுத்தியம்புவது யாது ?
(iii) 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்று கூறியவர் யார் ?
(iv) தமிழர் இயற்கை தரும் காய்கனிகளில் இருந்து எது கண்டு உண்டனர் ?
(v) பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம் எது ?

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

X. கீழ்க்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்க. 2x8=16

47. (அ) பெரியாரைத் துணையாகக் கொள்வது குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) கண்ணகிக்கும், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.

48. (அ) பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்தெழுதுக.

**அல்லது**

(ஆ) தமிழரின் மருத்துவ அறிவு குறித்துக் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

### பகுதி - 2

49. **செய்யுள் வடிவில் விடை தருக.** 2+2+3+3=10

(அ) ''ஞாலம்'' - எனத் தொடங்கும் குறள்.

(ஆ) ''கொளல்'' - என முடியும் குறள்.

(இ) ''மெய்தான் அரும்பி'' - எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடல்.

(ஈ) ''மீன் நோக்கும்'' - எனத் தொடங்கும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்.

-o0o-